Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
பலவகையான குன்றுபவர்களுக்கான சிறப்பு பள்ளி
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 3 சென்னை | தினசரி | 4 பக்கம் வெள்ளிக்கிழமை, அக்டோபர் 20, 2023 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 98

தி மு க தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் இன்று (20.10.2023) கொளத்தூர் தொகுதியில் பல்வேறு நலத்திட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்

சென்னை, 20 அக்டோபர் 2023: மாவட்டக் கழகச் செயலாளர் திரு. சேகர் பாபு அவர்கள் இங்கே தொடக்கத்தில் பேசுகிறபோது ஒன்றை குறிப்பிட்டுச் சொன்னார். கொளத்தூர் தொகுதி என்று சொன்னால், நான் எப்போது எல்லாம் வருகிறேனோ அப்போதெல்லாம் ஒரு எழுச்சியை ரூ உணர்ச்சியை ரூ மகிழ்ச்சியை - புத்துணர்ச்சியை, நான் பெறக்கூடிய வகையில், ஆறு நிகழ்ச்சிகளுக்கு குறையாமல் பங்கேற்கிறேன். இன்றைக்கு எட்டாவது நிகழ்ச்சி, ஆனால் அவர் ஆறு என்று சொல்லிவிட்டார். அதில் ஒரே ஒரு திருத்தம்தான்.

மாலை தொடங்கிய நிகழ்ச்சிகள், ஏறக்குறைய மூன்று மணி நேரமாக தொடர்ந்து, நான் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பை பெற்று, அரசு நிகழ்ச்சிகள் எல்லாம் முடித்துவிட்டு கழக நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன். என்னதான் அரசு பொறுப்பில் இருக்கிறோம் என்று சொன்னாலும், அதற்குக் காரணம் கழகம்தான் என்பதை நாம் மறந்துவிட முடியாது. மாலை தொடங்கிய நிகழ்ச்சியை நான் எண்ணிப்பார்க்கிறேன். ஒன்றிரண்டு நிகழ்ச்சிகள் இருந்தால் ஞாபகம் வைத்து சொல்லலாம். ஆனால் தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு வந்திருக்கின்ற காரணத்தினால், அவைகள் எல்லாம் முன்கூட்டியே குறித்து வைத்துவிட்டுதான் வந்திருக்கிறேன்.

● ð™ லவன் சாலையில் 3 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பில் கால்பந்தாட்ட ஆடுகளம் அதை திறந்து வைத்தேன்.

● அதைத் தொடர்ந்து, திரு. வி. க. நகர் 8-ஆவது தெருவில் 54 லட்சத்து 18 ஆயிரம் ரூபாய் மதிப்பில் பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டுத் திடலை திறந்து வைத்தேன்.

● ஜவகர் நகர் 1-ஆவது சர்குலர் சாலையில், தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவை குறிப்பிடும் வகையில் கலைஞர் நூற்றாண்டு நினைவு கண் மருத்துவ மையம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

● அனிதா அச்சீவர்ஸ் அகாடமி சார்பில் தையல் பயிற்சி மையம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

அதற்கு பின்னால், சட்டமன்ற அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சிகள்:

அதாவது 55 பேருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு நோட்டு புத்தகங்கள், சிலருக்கு மருத்துவ உதவிகள், இரண்டு இணையர்களுக்கு திருமண உதவிகள், ஒரு சிலருக்கு உதவி உபகரணங்கள்.

அதற்கு பின்னால், இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்னால், வி. வி. நகர் பகுதியில், 33 புதிய மறுசீரமைப்புப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழாக்கள். இவையெல்லாம் முடித்துவிட்டு நிறைவாக, இப்போது இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன். மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி வழங்கக்கூடிய நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன்.

நினைத்துப் பார்க்கிறேன், ஒவ்வொரு நிகழ்ச்சியையும் தனித்தனியாக வைத்து மேடை போட்டு வைத்திருந்தால், இந்த நிகழ்ச்சிக்கு இந்த நேரத்திற்கு வந்திருக்க முடியாது. அதனால் நேரத்தின் அருமை கருதி எனக்கு இருக்கக்கூடிய கால சூழ்நிலை கருதி, நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளர் அவர்களும், இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய நிர்வாகிகளும் அவைகள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் மேடையெல்லாம் போடாமல் எளிய வகையில், ஆனால் அதே நேரத்தில் இனிமையான வகையில் எழுச்சியோடு இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் ஏற்பாடு செய்து, அவையெல்லாம் சீக்கிரமாக முடித்துவிட்டு நிறைவாக நடக்கக்கூடிய இந்த நிகழ்ச்சிக்கு உங்களிடத்தில் நான் வந்து சேரவேண்டும். அந்தவகையில்தான் நான் உங்களிடத்தில் நான் வந்து சேர்ந்திருக்கிறேன்.

அதனால்தான் தொடக்கத்தில் சொன்னேன். கட்சியால்தான் ஆட்சி. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெறக்கூடிய இந்த நிகழ்ச்சி, ஒரு முக்கியமான நிகழ்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது. குறைந்தபட்சம் பத்து நாட்களுக்கு ஒருமுறை நான் இந்த தொகுதிக்கு வருவதை வழக்கமாக வைத்திருக்கிறேன். அப்படி வரும்போதெல்லாம், திறப்பு விழாக்கள், அடிக்கல் நாட்டு விழாக்கள், கட்சி நிகழ்ச்சிகள், திருமண நிகழ்ச்சிகள், திருமண ஜோடிகளின் இல்லத்திற்கு சென்று வாழ்த்து சொல்வது, நம்முடைய கழக தோழர்கள் யாராவது நம்மை விட்டு பிரிந்துவிட்டால், அவருடைய இல்லத்திற்குச் சென்று இரங்கல் தெரிவிப்பது, பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களை சென்று பார்ப்பது, சில இடங்களுக்கு சென்று ஆய்வு செய்வது, இப்படி தொடர்ந்து இந்த பகுதியில், இந்த தொகுதியில், செய்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், இன்றைக்கு உங்கள் வீட்டுப் பிள்ளையாய் என்னை நினைத்து நீங்கள் அன்போடு, பாசத்தோடு வரவேற்கக்கூடிய இந்த காட்சி இருக்கிறது.

நான் காரில் வருகின்றபோது நம்முடைய மாவட்டச் செயலாளரிடத்திலும், மற்றவர்களிடத்திலும் சொல்லிக் கொண்டு வந்தேன். முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு இந்தத் தொகுதிக்கு வருகின்றபோது, மனுக்களாக வந்து குவியும். அது குவியத் தொடங்கியபோது நம்மிடத்தில் மக்கள் இவ்வளவு எதிர்பார்க்கிறார்களே என்று, கொஞ்சம் பயம் வந்தது. நானும் அந்த மனுக்களை எல்லாம் பொறுமையாக வாங்கி, அதற்கு பிறகு அலுவலகத்தில் உட்கார்ந்து பரிசீலித்து படிப்படியாக செய்ய ஆரம்பித்து, இன்றைக்கு மனுக்கள் ஒருமுறை வருகிறபோது 25 மனுக்கள் வந்தாலே பெரிய விஷயம், அந்த அளவுக்கு குறைந்துவிட்டது.

எதற்கு சொல்கிறேன் என்றால், அந்த மனுக்களை தரக்கூடிய தோழர்கள், தாய்மார்கள், பெரியவர்கள், இளைஞர்கள், மகளிர், மாணவர்கள் ஆகியோர் எல்லாம் நம்பிக்கையோடு அந்த மனுக்களை தருகிறார்கள். அந்த மனுக்களை பெற்று எதற்கெல்லாம் தீர்வு காண முடிகிறதோ, அதற்கெல்லாம் தீர்வு கண்டு கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாக தெரியும்.

கொளத்தூருக்கு வருவது என்றாலே, அதில் ஒரு தனி இன்பம். இதைச் சொல்வதால் மற்ற தொகுதியைச் சார்ந்தவர்கள் யாரும் கோபித்துக் கொள்ளக் கூடாது. எல்லாத் தொகுதிக்கும் போவதால் எனக்கு இன்பம் கிடைக்கிறது. ஆனால் கொளத்தூர் வருகிறபோது என்னைத் தேர்ந்தெடுத்த தொகுதியாயிற்றே என்ற அந்த உணர்வு வரும். மற்ற தொகுதிகள் உள்ளவர்களும் நான்தான் முதலமைச்சராக வரவேண்டும் என்று தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

தேர்தலில் ஓட்டு போட்டீர்கள், ஓட்டு போட்டபிறகு, ஓட்டு எண்ணிக்கை நடந்தது, தமிழ்நாடு முழுவதும் யார் யாரெல்லாம் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று சொல்கின்றபோது, தேர்தலில் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை பெற்றுக் கொள்ளுங்கள் என்று இலயோலா கல்லூரி வாக்கு எண்ணும் மையத்திலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. உடனே அச்சான்றிதழை பெற்றுக்கொண்டு நேரடியாக தலைவர் கலைஞர் அவர்களின் நினைவிடத்திற்குதான் நாங்கள் சென்றோம். அந்த நினைவிடத்தில் தலைவர் கலைஞருக்கு நாங்கள் மரியாதை செய்துவிட்டு அங்கிருந்து புறப்படும்போது, நிருபர்கள் சூழ்ந்துகொண்டு என்னிடம் கேட்டார்கள். ஆட்சிக்கு வரக்கூடிய அளவுக்கு உங்களுக்கு பெரும்பான்மை வந்துவிட்டது. நீங்கள் தான் ஆட்சி அமைக்கப் போகிறீர்கள். மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள், இந்த வெற்றியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டபோது, மகிழ்ச்சி, என்று ஒரு வார்த்தை சொன்னேன். எங்களுக்கு வாக்களித்தவர்களுக்காக நன்றி சொல்கின்ற அதேநேரத்தில் நீங்கள் வாக்களித்து சரியான நபரைத் தான் தேர்ந்தெடுத்திருக்கிறோம் என்று சொல்லவேண்டும், அவர்கள் மகிழ்ச்சி அடையவேண்டும். மகிழ்ச்சி அடையக்கூடிய அளவிற்கு நாங்கள் பணியாற்றுவோம். அவர்கள் மட்டுமல்ல, வாக்களிக்காத மக்களும் மகிழ்ச்சி அடையக்கூடிய அளவிற்கு, ஆகா, இவர்களுக்கு ஓட்டுப் போடாமல் விட்டுவிட்டோமே என்று கவலைப்படக்கூடிய அளவிற்கு அவர்கள் பாராட்டவேண்டும். அதுதான் என்னுடைய குறிக்கோள் என்று சொன்னேன். அதுதான் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது என்று நீங்கள் கண்கூடாக பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

ஒரே ஒரு எடுத்துக்காட்டை மட்டும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், எவ்வளவோ திட்டங்கள், தேர்தல் நேரத்தில் அறிவித்த உறுதி மொழிகள் இவைகள் எல்லாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம், காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம். செய்து முடித்துக் கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதில் முக்கியமானது என்னவென்று கேட்டீர்கள் என்றால், அதை அறிவித்தபோதே, என் கூட இருந்தவர்கள் முடியுமா? என்று கேட்டார்கள். நடக்குமா? என்று கேட்டார்கள். ஆட்சிக்கு வந்த பிறகு, இது சாத்தியப்படுமா? என்று கேட்டார்கள். அதுதான் குடும்பத் தலைவிகளுக்கு உரிமைத் தொகையாக ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய திட்டம். உள்ளபடியே நானே பயந்தேன். காரணம், ஆட்சிக்கு வந்தபோது நிதி நிலவரத்தைப் பார்த்தால், அவ்வளவு மோசமாக இருந்தது. அதனால் நிறைவேற்ற முடியுமா? என்ற அச்சம் ஏற்பட்டது உண்மைதான். எல்லோருக்கும் ஏற்பட்டதுபோல எனக்கும் ஏற்பட்டது. ஆனால் நிதிநிலைமை ஓரளவிற்கு சரி செய்து, சீர்படுத்தி, அதற்கு பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய நம்முடைய அறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-ஐ தேர்ந்தெடுத்து அன்று முதல் வழங்கினோம், அக்டோபர் மாதமும் வழங்கப்பட்டுவிட்டது. இதில் என்ன பெரிய சிறப்பென்றால் செப்டம்பர் 15-ஆம் நாளன்று தான் வழங்கப்படும் என்றுதான் அறிவித்தோம். ஆனால், 14-ஆம் தேதி இரவே பணம் மகளிரின் வங்கிக் கணக்குக்கு சென்றுவிட்டது. இப்போது அக்டோபர் 14 விடுமுறை, ஆனால் 13ஆம் தேதியே பணம் அவர்களுக்கு சென்றுவிட்டது. எந்தவித குறுக்கீடும் இடையில் கிடையாது. எந்தவித தலையீடும் கிடையாது. அந்த குடும்பத்தின் வங்கி கணக்கிற்கு நேரடியாக போகக்கூடிய நிலையை உருவாக்கியிருக்கிறோம்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்கின்ற அற்புதமான திட்டத்தை அறிவித்தோம். அந்தத் திட்டத்தின் நோக்கம் என்னவென்று கேட்டால், 234 தொகுதிகள் இருக்கின்றது, ஆளும் கட்சி-திமுக, எதிர்க்கட்சி-அதிமுக, நம்முடைய தோழமை கட்சிகள்- காங்கிரஸ், இடது கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய முஸ்லீம் லீக், மனித நேய மக்கள் கட்சி, மதிமுக, விசிக போன்ற பல கட்சிகள் இருக்கிறது. அதுபோல, எதிர்க்கட்சியாக அதிமுக.

234 சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு அவைதான் சட்டமன்றம். அந்த 234 தொகுதிகளிலும், அந்தந்த தொகுதியில் இருக்கக்கூடிய எம். எல். ஏக்கள் விரும்பக்கூடிய 10 திட்டப்பணிகளை நீங்கள் தேர்ந்தெடுத்து கொடுத்தீர்கள் என்றால் அதை நிறைவேற்றி கொடுக்கிறோம் என்று ஒரு திட்டத்தை அறிவித்தோம். அந்த திட்டம் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு கொண்டிருக்கிறது. அந்த உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்ற திட்டத்தின் கீழ் எம். எல். ஏக்கள் தெரிவு செய்கிறார்கள் என்றால் அந்த எம். எல். ஏ. தேர்வு செய்கிறபோது அது முடியுமா, நடக்குமா என்று அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சியர்களோடு கலந்து பேசி, ஆய்வு செய்து அதற்கு பிறகு அந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அந்த அடிப்படையில் 1896 கோரிக்கைகள் அனுப்பினார்கள். அதில் இந்த ஆண்டுக்கு மட்டும் 788 பணிகளை செயல்படுத்த போகிறோம். இதற்காக 11 ஆயிரத்து 239 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

வரும் ஆண்டில் 203 பணிகளை முடிப்பதற்காக 5 ஆயிரத்து 901 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. நீங்கள் பத்திரிகையிலும், சமூக ஊடகங்களிலும் பார்த்திருப்பீர்கள். அ. தி. மு. க. வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஒருவர், அவர் பாராட்டி செய்தி கொடுத்திருக்கிறார்.

"நான் பத்து கோரிக்கைகளை அனுப்பி வைத்திருக்கிறேன். அதில் 3 கோரிக்கைகளை முதலமைச்சர் நிறைவேற்றி கொடுத்துவிட்டார். நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று வெளிப்படையாக அவர் சொல்லி இருக்கிறார். யாரென்று உங்களுக்குத் தெரியும், தெரியும் அல்லவா? அதை நான் விளம்பரப்படுத்த விரும்பவில்லை. ஏனென்றால் அவருக்கு ஏதாவது பிரச்சனை வந்துவிடும். ஆனால், வெளிப்படையாக வந்துவிட்டது, அவர் வேறு யாரும் அல்ல, முன்னாள் அமைச்சர் திரு. செங்கோட்டையன் அவர்கள். சில பேர் தொலைபேசியில் எனக்கு தகவல் சொன்னார்கள்.

இதை நான் சொல்வதற்குக் காரணம், கட்சி பாகுபாடு இல்லாமல் அரசியல் நோக்கத்தை எண்ணிப்பார்க்காமல், மக்களுடைய பிரச்சினை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய பிரதிநிதிகள் அவர்கள். மக்களின் பிரச்சினையை அடிப்படையாக வைத்து அவற்றையெல்லாம் இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாக தெரியும்.

நான் தொடக்கத்தில் சொன்னதுபோல, இதையெல்லாம் நிறைவேற்றுவதற்கு, இந்த பொறுப்பில் நான் உட்காருவதற்கு அந்த வாய்ப்பை மக்கள்தான் உருவாக்கி தந்தார்கள். ஆனால் மக்கள் உருவாக்கி தருவதற்காக ஓயாது உழைத்திருக்கக்கூடிய முன்னோடிகள்தான் இந்த இயக்கத்தின் முன்னோடிகள், அதை மறந்திட முடியாது. இது இன்றல்ல, திமுக ஆட்சியில் இல்லாத நேரத்திலும், நான் இளைஞர் அணி செயலாளராக இருந்தபோது, கட்சியின் துணைப் பொதுச் செயலாளராக இருந்தபோது, பொருளாளராக இருந்தபோது, செயல் தலைவராக இருந்தபோது, தலைவராக இருக்கும் இப்போதும் இந்தப் பணிகளை செய்து கொண்டிருந்தோம்; செய்தி கொண்டிருக்கிறோம். ஏதோ புதிதாக செய்கின்ற நிகழ்ச்சி அல்ல. இன்றைக்கு கூட இளைஞரணியின் செயலாளர் தம்பி உதயநிதி அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் செல்கின்றபோது, அமைச்சராக இருக்கின்ற போதல்ல, அமைச்சராவதற்கு முன்னால், இளைஞரணியின் செயலாளராக என்றைக்கு பொறுப்பு எடுத்துக் கொண்டாரோ அன்றிலிருந்து அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்றால், எங்கேயாவது நிகழ்ச்சிக்கு தேதியை கேட்டார்கள் என்றால், கட்சி முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குவதாக இருந்தால் நான் வருகிறேன், அந்த நிகழ்ச்சிக்கு ஒன்று ஏற்பாடு செய்யவேண்டும், அத்துடன் பல நிகழ்ச்சிகளுக்கு கலந்து கொள்கிறேன் என்று சொல்லி, கட்டாயப்படுத்தி, அதை உறுதி செய்துகொண்டுதான் எந்த நிகழ்ச்சிக்கும் செல்கிறார். இந்த நேரத்தில். உள்ளபடியே பாராட்டவேண்டும். மகன் என்ற காரணத்திற்காக அல்ல, கட்சியின் முன்னோடிகளுக்கு உரிய மரியாதை அவர் வழங்கிக் கொண்டிருக்கிறார் என்பதற்காகத்தான் அவரை இந்த நேரத்தில் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இன்றைக்கு நீங்கள் எல்லாம் இல்லை என்றால், இந்தக் கட்சியே இல்லை. நீங்கள் எல்லாம் இந்த இயக்கத்தினுடைய வேர்கள். இந்த வேர்கள் தான் இன்றைக்கு மரமாக, கிளையாக வளர்ந்து, நாங்கள் எல்லாம் இந்தப் பொறுப்பு இருக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். அப்படிப்பட்ட முன்னோடிகளை பெருமைப்படுத்துவதற்காக ஏதோ ஒரு கடமை மட்டுமல்ல, நீங்கள் மகிழ்ச்சியாக இருந்தால்தான் இந்த இயக்கம் மகிழ்ச்சியாக இருக்க முடியும். நீங்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு தெம்போடு இருந்தால்தான் இந்த இயக்கம் வளரமுடியும். இந்த இயக்கம் வளர்ந்தால் மக்கள் நாட்டில் நலமாக வாழ்ந்திடமுடியும். அதற்காகத்தான் இன்றைக்கு உங்களை ஊக்கப்படுத்த, உற்சாகப்படுத்த இந்த பொற்கிழி வழங்குகிறோம். உங்கள் பணி முடிந்துவிட்டது என்று உங்களை விட்டுவிடமாட்டோம். ஏதோ ஓய்வு கொடுத்துவிட்டார்கள் என்று நீங்கள் நினைத்துவிடாதீர்கள். ஏனென்றால் தலைவர் கலைஞர் அவர்கள் என்னை அழைக்கிற போதெல்லாம், ஓயாமல் உழைக்கக்கூடிய உழைப்பாளி என்று பலமுறை என்னிடத்தில் சொல்லியிருக்கிறார். ஓயாமல் இன்றைக்கு உழைத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், இந்த இயக்கம் தான், மக்கள் தான் காரணம். ஆகவே, இன்னும் நீங்கள் எங்களுக்கு அறிவுரைகள், ஆலோசனைகள் தொடர்ந்து வழங்கிடவேண்டும். நீங்கள் பக்கபலமாக இருந்தால்தான், நாங்களும் கடமைகளை வேக வேகமாக நிறைவேற்றமுடியும்.

அந்த உணர்வோடுதான் உங்களை பெருமைப்படுத்துவதன் மூலமாக நாங்கள் பெருமைப்படுகிறோம். நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஆகவேதான், அந்த நிலையில்தான் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே இது நம்முடைய நிகழ்ச்சி, நம்முடைய தொகுதி, இது நம்முடைய குடும்ப விழா, அப்படிப்பட்ட விழாவில் உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன். இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கக்கூடிய நம்முடைய கழக நிர்வாகிகள், பகுதி கழக, வட்டக்கழக செயலாளர்கள், குறிப்பாக ஒரே ஒரு சொல்லவேண்டும் என்று சொன்னால் நம்முடைய செயல் பாபு, சேகர் பாபு அவர்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்து உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

இவ்வாறு அவர் உரையாற்றினார்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

புதிய டப்பிங் நிறுவனம் துவங்கினார் 'கடாரம் கொண்டான்' புகழ் நடிகர் விகாஸ் ஸ்ரீவஸ்தவ்

சென்னை, 20 அக்டோபர் 2023: 'கடாரம் கொண்டான்' படத்தில் சியான் விக்ரமுக்கு வில்லனாக நடித்ததன் மூலம் புகழ்பெற்றவர் நடிகர் விகாஸ் ஸ்ரீவஸ்தவ். தற்போது விகாஸ் ஸ்ரீவஸ்தவ் டப்பிங் கம்பெனி என்கிற பெயரில் சொந்தமாக டப்பிங் கம்பெனி துவங்கியுள்ளார்.

தனது இந்த புதிய துணிச்சலான முயற்சி குறித்து அவர் கூறும்போது, "கடந்த 22 வருடங்களாக ஹாலிவுட், பாலிவுட், டோலிவுட் மற்றும் கோலிவுட் ஆகியவற்றில் 50-க்கும் மேற்பட்ட படங்களில் நான் நடித்துள்ளேன். மணிரத்னம் சார், கமல்ஹாசன் சார், சியான் விக்ரம் சார், ஆமிர்கான் சார் அல்லது அவதார் & டோன்ட் பிரீத் புகழ் ஹாலிவுட் நடிகர் ஸ்டீபன் லேங் என இவர்கள் அனைவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பை பெற்றுள்ளேன்.

சினிமா என் நரம்புகளில் ரத்தமாக ஓடுகிறது. நான் விரும்பியபடி எனக்கு கதாபாத்திரங்களோ வேலையோ கிடைக்காதபோது நான் மிகவும் வருத்தப்படுகிறேன். அதனால்தான் விகாஸ் ஸ்ரீவஸ்தவ் பிலிம்ஸ் டப்பிங் நிறுவனத்தை 6 மாதங்களுக்கு முன்பு

தொடங்கினேன். 'தி காந்தி மர்டர்' என்ற ஹாலிவுட் படத்தின் முழு டப்பிங் பணிகளையும் நான் தான் ஏற்பாடு செய்து ஒருங்கிணைத்து கொடுத்தேன்.

மேலும் அவர் கூறுகையில், "அதைத் தொடர்ந்து கிச்சா சுதீப் மற்றும் உபேந்திரா நடித்த கன்னட ஹிட் படமான 'கப்ஜா'வுக்கு ஹிந்தியில் டப்பிங் பேசினேன். தெலுங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விரைவில் வெளியாக உள்ள படங்களில் ஒன்றான 'டைகர் நாகேஸ்வர் ராவ்' படத்தில் 100க்கும் மேற்பட்ட டப்பிங் கலைஞர்களுடன் மாஸ் மகாராஜா ரவி தேஜா, நூபுர் சனோன் ஆகியோர் பங்கு பெற்ற, தியேட்டர்களுக்கான இந்தி டப்பிங் பணியை இப்போது தான் முடித்தேன். தயாரிப்பாளர் அபிஷேக் அகர்வால் ஏற்கனவே 'காஷ்மீர் ஃபைல்ஸ்', 'கார்த்திகேயா- 2', 'வேக்ஸின் வார்' போன்ற படங்களைத் தயாரித்துள்ளார். இந்தப் படத்தின் இயக்குநர் வம்சி சார் ஏற்கனவே தெலுங்கில் 2 சூப்பர் ஹிட் படங்களைத் இயக்கியுள்ளார்..

டைகர் நாகேஸ்வரராவ், நிச்சயம் வரலாறு படைப்பார் என்பது என் கருத்து. தெற்கிலிருந்து ஹிந்திப் படங்கள் வரை டப்பிங் உலகில் ஒரு புரட்சியை என்னால் கொண்டுவர முடியும் என்று நம்புகிறேன். ஏனென்றால் இன்றுவரை ஹிந்தியில் டப்பிங் செய்யப்பட்ட அனைத்து தென்னிந்தியப் படங்களிலும் இயக்குநர் எதற்கு முதலிடம் கொடுத்திருந்தாரோ அந்த சாரம் இருப்பதில்லை. அவற்றின் நிஜத்தன்மையை தக்கவைத்து ஹிந்தியில் முழுமையாக அவற்றை மொழிமாற்றம் செய்வதே எனது நோக்கம். ஏனெனில் ஒரு வார்த்தை கூட படத்தின் மொத்த கருத்தையும் மாற்றிவிடும்., ஒரு இயக்குநர் ஒரு படப்பிடிப்பு தளத்தில் என்ன செய்வாரோ அதேபோல் தருவதற்கு எனது ஸ்டுடியோ மூலமாக நான் கடினமாக உழைக்கிறேன். ஒரு இயக்குநர் எழுதுவதற்கு சில மாதங்கள் ஆகும் ஒரு ஸ்கிரிப்டை நான் 30 நாட்களில் புரிந்துகொள்கிறேன். அதை இழுத்து வருவதற்கு ஒருவர் கதையைப் புரிந்து கொள்ள வேண்டும். இது அவ்வளவு எளிதான காரியம் அல்ல என்றாலும் 22 வருடங்களாக நடித்துவரும் என்னைப் போல் ஒருவருக்கு ஒரு திரைப்படம் எப்படி உருவாகிறது என்பதை புரிந்துகொள்ள முடியும்.. நான் சில நிமிடங்களில் விளக்கிய இந்த விவரங்களை அக்-20ல் என்னுடைய 'டைகர் நாகேஸ்வரராவ்' சந்திக்கும்போது நீங்கள் புரிந்துகொள்வீர்கள்" என்கிறார் விகாஸ் ஸ்ரீவஸ்தவ் மகிழ்ச்சியுடன்.

வெற்றிப்பட தயாரிப்பாளர் ஜே எஸ் கே இயக்குநர் அவதாரம் எடுக்கும் முற்றிலும் மாறுபட்ட திரைப்படம் 'ஃபயர்'

சென்னை, 20 அக்டோபர் 2023: பாலாஜி முருகதாஸ், ரச்சிதா மகாலட்சுமி, சாக்ஷி அகர்வால், காயத்ரி ஷான் உள்ளிட்டோர் நடிப்பில் உருவாகும் பரபர திரில்லர்

பல்வேறு வெற்றி படங்களின் விநியோகஸ்தராக தடம் பதித்து, தேசிய விருது பெற்ற மற்றும் சூப்பர் ஹிட் திரைப்படங்களின் தயாரிப்பாளராக உயர்ந்து, நடிகராகவும் முத்திரை பதித்து வரும் ஜே எஸ் கே இயக்குநராக தற்போது அவதாரம் எடுத்துள்ளார்.

இவர் எழுதி இயக்கும் திரைப்படத்திற்கு 'ஃபயர்' என்று பெயரிடப்பட்டுள்ளது. பாலாஜி முருகதாஸ், ரச்சிதா மகாலட்சுமி, சாக்ஷி அகர்வால் மற்றும் காயத்ரி ஷான் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடிக்கும் இப்படம் தமிழகத்தையே உலுக்கிய ஒரு உண்மை சம்பவத்தின் பின்னணியில் உருவாகும் விறுவிறுப்பான திரில்லர் ஆகும்.

பெண்களின் விழிப்புணர்வு குறித்து பேசும் 'ஃபயர்' திரைப்படம் குறித்த தகவல்களை பகிர்ந்த ஜே எஸ் கே, "இன்றைய காலத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் ஆபத்துகள் குறித்தும்

அவர்கள் எவ்வாறு அவற்றை கடந்து வருவது என்பது குறித்தும் மாறுபட்ட கோணத்தில் இப்படம் அலசும். தொடர்ந்து தவறான செயல்களில் தெரிந்தே ஈடுபடும் ஆண்கள் இந்த சமுதாயத்தில் சகஜமாக நடமாடும் நிலையில், பெண்கள் தெரியாமல் தவறு செய்தாலும் அவர்களை நமது சமூகம் வேறு மாதிரி பார்க்கிறது. இந்த சமூக பார்வை மாறினால் மட்டுமே நல்ல சமுதாயம் உருவாகும். ஏனென்றால் இவ்வாறு இருப்பது இந்த தலைமுறைக்கு மட்டுமல்ல, அடுத்த தலைமுறைக்கும் நல்லதல்ல எனும் கருத்தையும் ரசிகர்களுக்கு இப்படம் கொண்டு செல்லும்," என்று கூறினார். மேற்கண்ட விஷயங்களை சிறிதும் சுவாரஸ்யம் குறையாமலும், அதே சமயம் சமுதாய விழிப்புணர்வு ஏற்படும் வகையிலும் ஃபயர் எடுத்துரைக்கும் என்றும், இன்றைய காலகட்டத்திற்கு மிகவும் அவசியமான திரைப்படமாக இது இருக்கும் என்றும் ஜே எஸ் கே மேலும் தெரிவித்தார்.

தனது ஜே எஸ் கே ஃபிலிம் கார்ப்பரேஷன் பேனரில் தயாராகும் ஃபயர் திரைப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் தொடங்கி தொடர்ந்து நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

இப்படத்திற்கு டி கே (அறிமுகம்) இசையமைக்க, சதீஷ் ஜி ஒளிப்பதிவு செய்கிறார். எஸ் கே ஜீவா வசனங்களை எழுதியுள்ளார். படத்தொகுப்பை சி எஸ் பிரேம் குமாரும் கலை இயக்கத்தை சுரேஷ் கல்லேரியும் கவனிக்க, பாடல்வரிகளை மதுர கவியும், ராவும் எழுதுகின்றனர். உடைகள் வடிவமைப்புக்கு டினா ரோசாரியோவும் மக்கள் தொடர்புக்கு நிகில் முருகனும் பொறுப்பேற்றுள்ளனர்.

பன்மொழி வெற்றிப் படங்களின் விநியோகஸ்தரான ஜே எஸ் கே, தேசிய விருது வென்ற 'தங்க மீன்கள்' மற்றும் 'குற்றம் கடிதல்', 'இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா', 'நாலு போலீசும் நல்லா இருந்த ஊரும்', 'மதயானைக் கூட்டம்', 'தரமணி', 'புரியாத புதிர்' மற்றும் விரைவில் வெளியாக உள்ள 'அண்டாவ காணோம்' உள்ளிட்ட படங்களின் தயாரிப்பாளர் ஆவார்.

சல்மானும் கத்ரீனாவும் மீண்டும் ஒரு பார்ட்டி டிராக்குடன் வந்துள்ளனர், புலி 3 இல் இருந்து லேகே பிரபு கா நாம், அது உங்களை உற்சாகப்படுத்தும்

சென்னை, 20 அக்டோபர் 2023: டைகர் 3 இன் டிரெய்லர் உடனடியாக பார்வையாளர்களால் ஈர்க்கப்பட்டது, இப்போது தயாரிப்பாளர்கள் திங்கட்கிழமை வெளியிடப்படும் முதல் பாடலான 'லேகே பிரபு கா நாம்' வெளியிடுவதன் மூலம் உற்சாகத்தை அதிகரிக்கத் தயாராகி வருகின்றனர்.

முதல் பாடல் அரிஜித் சிங் மற்றும் நிகிதா காந்தி இணைந்து சல்மான் மற்றும் கத்ரீனா கைஃப் இணைந்து பாடிய நடன எண், இரண்டாவது பாடல் பார்வையாளர்கள் மற்றும் ரசிகர்களின் இதயங்களைத்

தொடும் ஒரு காதல் பாடல்!

இயக்குனர் மனீஷ் ஷர்மா, "லேகே பிரபு கா நாம் அடுத்த வாரம் கைவிடப்படும் வரை காத்திருக்க முடியாது! கத்ரீனாவின் அதீத அழகும், இருவருக்குமான கெமிஸ்ட்ரியும் எல்லோரும் நடனமாடுவதற்கான சரியான ஃபார்முலாவாக அமைகிறது! துருக்கியின் கப்படோசியாவில் நாங்கள் மிகவும் வேடிக்கையாக படப்பிடிப்பை மேற்கொண்டோம், மேலும் இது சல்மானும் கத்ரீனாவும் இணைந்து பெற்ற வெற்றிகளின் ஏற்கனவே பொறாமைப்படக்கூடிய பட்டியலில் சேர்க்க மற்றொரு பெரிய நடன சார்ட்பஸ்டராக இருக்கும்.

டைகர் 3 இந்த ஆண்டு நவம்பர் 12 ஞாயிற்றுக்கிழமை வெளியாகிறது!

'ஹரா' படத்தில் நாயகனாகவும் 'தளபதி 68'ல் எதிர் நாயகனாகவும் ஒரே சமயத்தில் அதிரடியாக கலக்கும் மோகன்

சென்னை, 20 அக்டோபர் 2023: பள்ளியில் படிக்கும் போதிலிருந்தே முதலுதவி, குட் டச், பேட் டச் உள்ளிட்டவற்றை குழந்தைகளுக்கு சொல்லித் தருவது போல, ஐபிசி சட்டங்களையும் அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தும் 'ஹரா' திரைப்படத்தில் நீண்ட இடைவெளிக்கு பின்னர் நாயகனாக மோகன் நடிக்கிறார். இயக்குநர் விஜய் ஸ்ரீ ஜியின் கதையை பெரிதும் விரும்பி 'ஹரா' திரைப்படத்தில் நாயகனாக மோகன் நடிப்பது குறிப்பிடத்தக்கது.

மென்மையான பாத்திரங்களில் நடித்து மக்கள் மனதில் தனியிடம் பிடித்த மோகன், 'ஹரா'வில் அதிரடி வேடத்தில் நடிக்கும் நிலையில், திரைப்படத்தின் முதல் பார்வை, டீசர் உள்ளிட்டவை பெரும் எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளதன் அடுத்தக் கட்ட நகர்வாக, ஏஜிஎஸ் என்டர்டெயின்மென்ட் தயாரிப்பில் வெங்கட் பிரபு இயக்கத்தில் விஜய் நடிக்கும் 'தளபதி 68' திரைப்படத்தில் எதிர் நாயகனாக மோகன் நடிக்கிறார்.

கோயம்புத்தூர் எஸ் பி மோகன் ராஜ் மற்றும் ஜி மீடியா ஜெய ஸ்ரீ விஜய் தயாரிப்பில், 'தாதா 87' மற்றும் 'பவுடர்' படங்களை இயக்கியுள்ள விஜய் ஸ்ரீ ஜி இயக்கத்தில் உருவாகி வரும் 'ஹரா' படத்தின் இறுதி கட்ட படப்பிடிப்பு வரும் ஜனவரி மாதம் தொடங்குகிறது. தமிழ் மற்றும் மலையாள திரையுலகின் முன்னணி நடிகர்கள் இதில் நடிக்கிறார்கள்.

'ஹரா' படத்தை தொடர்ந்து 'ஜோசப் ஸ்டாலின்' என்ற பான்-இந்தியா திரைப்படத்தை விஜய் ஸ்ரீ ஜி இயக்குகிறார். தமிழ் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் ஒரே சமயத்தில் படமாக்கப்பட்டு தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தியில் டப்பிங் செய்யப்படவுள்ள, மிகவும் வித்தியாசமான கதைக் களத்தில் உருவாகவுள்ள இத்திரைப்படத்தின் 'ஹரா' திரைப்படத்தில் சாருஹாசன், சுரேஷ் மேனன், வனிதா விஜயகுமார், யோகி பாபு, அனுமோல், மொட்டை ராஜேந்திரன், சிங்கம்புலி, தீபா, மைம் கோபி, சாம்ஸ், கௌஷிக், அனித்ரா நாயர், மற்றும் சந்தோஷ் பிரதாகர் உள்ளிட்ட ஏராளமான நடிகர்கள் நடிக்க, மிகுந்த பொருட்செலவில் இப்படம் உருவாக்கப்பட்டு வருகிறது.

உட்புற காற்றின் தரத்தை டைசன் இரட்டிப்பாக்குகிறது: டைசன் பியூரிபையர் பிக்+கொயிட் அறிமுகம், 1076 சதுர அடி வரை அறைகள் முழுவதும் எச் ஈ பி ஏ சுத்திகரிக்கப்பட்ட காற்றை வழங்குகிறது

சென்னை, 20 அக்டோபர் 2023: டைசன் தனது சமீபத்திய காற்று சுத்திகரிப்பு தொழில்நுட்பத்தை இன்று வெளியிட்டது. இது 1000 சதுர அடி பரப்பளவு வரை காற்றை சுத்திகரிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. நாம் சுவாசிக்கும் காற்றைக் கட்டுப்படுத்துவது4 நமது ஆரோக்கியத்திற்கும் நல்வாழ்விற்கும் முக்கியமானது. வெளிப்புற மாசு நமது உட்புற இடங்களுக்குள் நுழைந்து உட்புற மாசுகளுடன் வினைபுரிந்து, அழுக்குக் காற்றின் சிக்கலான கலவையை உருவாக்கலாம் - சில சமயங்களில், வெளிப்புறக் காற்றை விட உட்புறக் காற்று அதிக மாசுபடுத்தும்.

டைசன் பியூரிபையர் பிக்+கொயிட் ஆனது 10-மீட்டர் ப்ரொஜெக்ஷனை வழங்க கோன் ஏரோடைனமிக்ஸைப் பயன்படுத்துகிறது. சக்திவாய்ந்த ப்ரொஜெக்ஷனுடன், டைசன் பியூரிபையர் பிக்+கொயிட் அமைதியாக செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது வெறும் 56 டெசிபல் சத்தத்தை உருவாக்குகிறது. இது டைசனின் அமைதியான மற்றும்

சக்திவாய்ந்த சுத்திகரிப்பானாக அமைகிறது.

"மோசமான உட்புற காற்றின் தரம் வளர்ந்து வரும் பிரச்சினையாக உள்ளது இது மிகவும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. நமது வீட்டுச் சூழல்கள் துகள் மற்றும் வாயு மாசுக்களால் நிறைந்திருக்கும். அதில் மகரந்தம், செல்லப் பிராணிகள், என்ஓ2, சிஓ2, சுத்தம் செய்யும் பொருட்களில் இருக்கும் விஓசி-கள் மற்றும் பல அடங்கும். இந்த துகள்கள் ஒவ்வொன்றும் ஆரோக்கியமற்ற சூழலுக்கு பங்களிக்கும், இது உடல்நலக் குறைவை ஏற்படுத்தும். டைசன் பியூரிபையர் பிக்+கொயிட் 1076 சதுரடி வரையிலான இடங்களில் சரியாக சுத்திகரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட எங்களின் முதல் சுத்திகரிப்பானாகும். இது மிகவும் பயனுள்ள வடிகட்டுதல் மற்றும் சக்திவாய்ந்த ப்ரொஜெக்ஷன் ஆகியவற்றின் கலவையாக உள்ளது. இது கண்ணுக்குத் தெரியாத மாசுகளை அகற்றுகிறது. புதிய கோன் ஏரோடைனமிக்ஸ் மூலம் 10 மீட்டர் வரை சுத்திகரிக்கப்பட்ட காற்றைத் திட்டமிடலாம், டைசன் பியூரிபையர் பிக்+கொயிட் உடன் உங்கள் வீட்டின் ஒவ்வொரு மூலையையும் சுத்தம் செய்ய முடியும்" என டைசன் பொறியியல் இயக்குனர் - சுற்றுச்சூழல் பராமரிப்பு, மாட் ஜென்னிங்ஸ் தெரிவித்தார்.

விழா காலத்தில் ஆரோக்கியமான உணவு முறையை கையாள்வதற்கான உதவிக்குறிப்புகள்

பிச்சையா காசிநாதன், உணவியல் நிபுணர், ஃபோர்டிஸ் மலர் மருத்துவமனை, அடையாறு

சென்னை, அக்டோபர் 20, 2023: பண்டிகைக் காலம் நெருங்கும் போது, இனிப்புகளின் சுவை மற்றும் வாசனையின் ஈர்ப்பினால் சிறிது தின்பண்டங்களை அதிகமாக உண்பதினால் ஒருவர் எடை அதிகரிப்பது சாதாரணமான நிகழ்வாகும். இருப்பினும், இந்த சுவையான உணவுகளை அதிகமாக உட்கொள்வது ஆரோக்கியமற்ற எடை அதிகரிப்புக்கு வழிவகுக்கும் மற்றும் ஒருவரின் ஆரோக்கியத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

உடல் எடை அதிகரிப்பதைத் தவிர்க்க நீங்கள் பண்டிகை காலங்களில் உண்ணும் உணவு அல்லது தின்பண்டங்களின் உட்கொள்ளலைக் கண்காணிப்பது முக்கியம். ஆகையால் இந்த விழாக் காலத்தில் உங்கள் ஆரோக்கியத்திற்கும் சிறந்த முறையில் சிற்றுண்டி செய்வது மற்றும் சுவை மொட்டுக்களின் தேவையை எப்படி ஈடு செய்வது என்பது குறித்த சில வழிகாட்டுதல்களை நாங்கள் வழங்குகிறோம்.

இந்த ஆண்டு விடுமுறை உணவுகளை ஆரோக்கியமாக்குவதற்கான உதவிக்குறிப்புகள்:

1. இனிப்புகளை வீட்டில் தயார் செய்யுங்கள்

இனிப்புகள் இல்லாமல், இந்தியாவில் கொண்டாட்டங்கள் நிறைவடையாது. ஒவ்வொருவரும் தங்களுக்குப் பிடித்த உணவுகளை எதிர்பார்க்கிறார்கள். பிரச்சினை என்னவென்றால், கடைகளில் தயாரிக்கப்படும் இந்த இனிப்புகளில் பல கொழுப்பு சத்து, பதப்படுத்தப்பட்ட மாவு, செயற்கை இனிப்புகள் மற்றும் வண்ணம் ஆகியவை கணிசமாக கலக்கப்படுகிறது. இந்த ஆண்டு இனிப்புகள் வாங்குவதற்குப் பதிலாக, நல்ல தரமான மற்றும் சுத்தான பொருட்களுடன் வீட்டிலேயே தின்பண்டத்தை தயாரிக்கவும். வீட்டில் இனிப்புகள் மற்றும் தின்பண்டங்கள் செய்யும் போது சர்க்கரை மற்றும் கொழுப்பு அளவின் மீது உங்களுக்கு அதிக கட்டுப்பாடு உள்ளது. இதன் விளைவாக, நீங்கள் குற்ற உணர்ச்சியின்றி இனிப்புகளை உண்ணலாம்.

2. ஆரோக்கியமான தின்பண்டங்களைத் தேர்ந்தெடுக்கவும்

உணவுக்கு இடையில் ஆரோக்கியமான தின்பண்டங்கள் பசியைக் குறைக்கும் அதே வேளையில் உங்களை முழு ஆற்றலுடனும் வைத்திருக்கும். சிறப்பு நிகழ்வுகள், விளையாட்டு அல்லது பார்வையாளர்களாக இருக்கும் போது வழங்கப்படும் சிற்றுண்டிகள், ஒட்டுமொத்த கலோரி எண்ணிக்கையை அதிகரிக்கலாம். குறைந்த உப்பு, சர்க்கரை மற்றும் கொழுப்பு உள்ளிட்ட ஆரோக்கியமான பண்டங்களை மோசமான விளைவை விளைவிக்கும் தின்பண்டங்களுக்கு பதிலாக மாற்றவும். வறுத்த தின்பண்டங்களில் வறுத்த மக்கானா, வறுத்த கொண்டைக்கடலை, முந்திரி பருப்புகள், தினை கலவைகள், முறுக்கு, சீடை, பாதாம், மற்றும் உலர்ந்த பழங்கள் ஆகியவை கடைகளில் வாங்கும் பண்டங்களை விட ஆரோக்கியமானதாகும்..

3. ஆரோக்கியமான மாற்று உணவுகளைத் தேடிச் செல்லுங்கள்

சரிவிகித உணவை உட்கொண்டால் உங்களுக்கு பிடித்த உணவுகள் மற்றும் இனிப்புகளை நீங்கள் கைவிட வேண்டியதில்லை. இருப்பினும், சாப்பிடுவது மகிழ்ச்சிக்காகவும் கொண்டாட்டத்திற்காகவும் மட்டுமல்ல, உங்கள் உடலுக்கு சக்தியளிக்கவும் கூட என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் படைப்பாற்றலைப் பயன்படுத்துங்கள். தேவையானது ஒரு சிறிய மாற்றம் மட்டுமே. உதாரணமாக, சக்கரைக்கு பதிலாக தேன் அல்லது பனை வெல்லத்தை மாற்றவும். உங்கள் செய்முறையில் நச்சுத்தன்மையுள்ள மைதாவிற்குப் பதிலாக முழு கோதுமை அல்லது ராகி அல்லது தினை போன்ற சத்தான மாவு வகைகளை சேர்க்கவும்.

4. அதிகம் உண்ட தின்பண்டங்களுக்கு ஈடாக உணவைத் தவிர்க்காதீர்கள்

காலை வேலை உணவை தவிர்த்திருந்தால் உங்கள் அடுத்த உணவின் போது நீங்கள் அதிகமாக சாப்பிடுவீர்கள் அல்லது உங்கள் உடலுக்குத் தேவையானதை நீங்கள் உட்கொள்ளாவிட்டால் கொழுப்பு, சர்க்கரை நிறைந்த உணவுகளை விரும்பத் தொடங்குவீர்கள். ஆரோக்கியமான காலை உணவோடு நாளை நன்றாகத் தொடங்கலாம். புரதம் மற்றும் நார்ச்சத்து நிறைந்த காலை உணவு ஆரோக்கியமான அடுத்த வேலை உணவுக்கு உங்களை தயார்படுத்தும். பொதுவாக ஒவ்வொரு இரண்டு முதல் மூன்று மணி நேரம் இடைவெளியில் அல்லது தேவைக்கேற்ப ஆரோக்கியமான சிற்றுண்டியை சாப்பிடுங்கள்.

5. ஒவ்வொரு உணவிலும் சாலட்களைச் சேர்க்கவும்

விடுமுறை நாட்களில் வீட்டில் உணவு உண்பது குறைந்து வருகிறது. வெளியில் உணவு சாப்பிட நேரும்போது சத்தான, காய்கறி சாலட்டை உட்கொள்வதன் மூலம், உங்கள் கலோரி உட்கொள்ளலை சமநிலைப்படுத்த முடியும். அதிகமாக சாப்பிடுவதைத் தடுக்கவும், விரைவில் உண்ட திருப்தி அடையவும் முடியும். இயற்கை காய்கறி சாலட் நார்ச்சத்து மற்றும் நன்மை பயக்கும் ஊட்டச்சத்துக்களைப் பெற ஒரு அருமையான முறையாகும்.

6. நீங்கள் என்ன குடிக்கிறீர்கள் என்பதை கவனித்துக் கொள்ளுங்கள்

மது மக்களை அதிக பசியடையச் செய்வதாகவும், சத்தற்ற உணவு வகையாகவும் அறியப்படுகிறது. அவற்றை உட்கொள்ளும் போது உடல் அதன் தேவையற்ற சத்துகளை கொழுப்பாக சேமித்து வைக்கிறது என்பதை நாம் அறிவோம். ஏரேட்டட் குளிர் பானங்கள், சர்க்கரை அல்லது செயற்கை இனிப்பு பானங்கள் எல்லா வகையிலும் தவிர்க்கப்பட வேண்டும். விடுமுறை நாட்களில், கிரீன் டீ, டீடாக்ஸ் தண்ணீர், தேங்காய் தண்ணீர், மற்றும் இயற்க்கை பழச்சாறுகளைத் தேர்வு செய்யவும்..

ஆரோக்கியமான மற்றும் சுவையான தினையால் தயாரிக்கப்பட்ட தின்பண்டங்களை எடுத்துக்கொள்வதன் மூலம் ஆரோக்கியமான உணவை சேர்க்க முடியும். உங்களுக்குப் பிடித்தமான கடைகளில் குறைந்த கிளைசெமிக் இண்டெக்ஸ் உள்ள சிற்றுண்டிகளைத் தேர்ந்தெடுங்கள். பண்டிகை காலங்களில் நீங்கள் உட்கொள்ளும் அதிகப்படியான கலோரிகளை எரிக்க மிகவும் பயனுள்ள வழி உடற்பயிற்சியே ஆகும். இந்த பரிந்துரைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் விடுமுறை காலத்தில் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.

பங்காரு அடிகளார் மறைவு சுதேசி தமிழர் கட்சி இரங்கல்

மதுரை, 20 அக்டோபர் 2023: சுதேசி தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் நன்மாறன்ராஜசேகர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், அனைத்து உழைக்கும் மக்கள் மற்றும் உழைக்கும் மகளிர் பெருமக்களால் ☼அம்மா☼ என்று அன்போடு அழைக்கப் பெற்ற பங்காரு அடிகளார் அவர்களின் மறைவுச் செய்தி அதிர்ச்சியளிக்கிறது. அன்னாரது மறைவுக்கு சுதேசி தமிழர் கட்சி ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.



2022-ஆம் ஆண்டிற்கான உலக திறன்கள் போட்டியில் வெற்றி பெற்றவர்களை பாராட்டியுள்ள தர்மேந்திர பிரதான், இந்தியா ஸ்கில்ஸ் 2023-24 போட்டியைத் துவங்கி வைத்தார்

புதுடெல்லி, 20 அக்டோபர் 2023: 2022-ஆம் ஆண்டுக்கான உலக திறன்கள் போட்டியின் சிறப்புப் பதிப்பில் பங்கேற்ற இந்தியாவைச் சேர்ந்த 18 போட்டியாளர்களை, கல்வி மற்றும் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறையின் அமைச்சர், திரு தர்மேந்திர பிரதான் அவர்கள் பாராட்டியுள்ளார். இந்த போட்டிகளில் 2 வெள்ளிப் பதக்கங்கள், 3 வெண்கலப் பதக்கங்கள், மற்றும் 13 சிறப்பு பதக்கங்களுடன் இந்தியா 11-வது இடத்தைப் பிடித்துள்ளது. விமர்சையான நடைபெற்ற பாராட்டு விழாவில் வெற்றி பெற்றவர்களுக்கும், அவர்களுக்குப் பயிற்சியளித்த நிபுணர்களுக்கும் சான்றிதழ்கள் மற்றும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தைப் பயன்படுத்தி - அனைவராலும் பெரிதும் எதிர்பார்க்கப்படும், நாட்டின் மிக முக்கியமான தேசிய திறன்கள் போட்டியான ‘இந்தியா ஸ்கில்ஸ் 2023-24’ துவங்கப்படுவதை மாண்புமிகு அமைச்சர், திரு. பிரதான் அவர்கள் அறிவித்தார். இதில் பங்கேற்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் ஸ்கில் இந்தியா டிஜிட்டல் தளத்தில் தங்களை பதிவு செய்து கொள்ளலாம். திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தின் (எம் எஸ் டி ஈ) செயலாளர் திரு. அதுல் குமார் திவாரி; யூஜிசி-யின் சேர்மன், பேராசிரியர் எம்.ஜெகதீஷ் குமார்; திறன் மேம்பாடு & தொழில்முனைவோர் அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர், திரு. கிருஷ்ண குமார் திவேதி; ஏஐசிடிஇ-யின் சேர்மன், பேராசிரியர் டி.ஜி. சீதாராம்; டைரக்டர் ஜெனரல் (பயிற்சி) செல்வி. திரிஷால்ஜித் சேத்தி; மற்றும் என் எஸ் டி சி-யின் தலைமை செயல் அலுவலரும், என் எஸ் டி சி இன்டர்நேஷனலின் நிர்வாக இயக்குநருமான திரு. வேத் மணி திவாரி உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

கொரோனா பெருந்தொற்று காரணமாக மே மாதத்தில் நடக்கவிருந்து, ரத்து செய்யப்பட்ட ‘வேர்ல்டு ஸ்கில்ஸ் ஷாங்காய் 2022’ போட்டிக்கான அதிகாரப்பூர்வ மாற்றாக இந்த ‘உலக திறன்கள் போட்டி 2022-இன் சிறப்பு நிகழ்வு’ நடத்தப்பட்டது. அதன் அசல் பாணியிலிருந்து சற்று மாறுபட்டிருந்த இந்த திறன் போட்டிகள் - 15 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் கடந்த 7 செப்டம்பர் 2022 முதல் 26 நவம்பர் 2022 வரை, 12 வாரங்களுக்கு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்றவர்களுக்கு ரூ.8 லட்சமும், நிபுணர்களுக்கு ரூ.3 லட்சமும் ரொக்கப் பரிசாக வழங்கப்பட்டது. வெண்கலப் பிரிவில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசாக ரூ.6 லட்சமும், நிபுணர்களுக்கு பரிசாக ரூ. 2 லட்சமும் வழங்கப்பட்டது. மெடாலியன் ஆஃப் எக்ஸலன்ஸ் சிறப்புப் பதக்கங்களைப் பெற்ற மாணவர்கள் மற்றும் வல்லுநர்களுக்கு முறையே ரூ.2 லட்சம் மற்றும் ரூ.1 லட்சம் ரொக்கப் பரிசாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாண்புமிகு கல்வி மற்றும் திறன் மேம்பாடு, & தொழில்முனைவோர் துறை அமைச்சர், திரு. தர்மேந்திர பிரதான், அவர்கள், “மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் - இந்த 21-ஆம் நூற்றாண்டில் முன்னோடியாக இருந்து வழிநடத்துவதற்கு நமக்குத் தேவையான - திறன்கள், நடைமுறைப் பயன்பாட்டு அறிவாற்றல், மற்றும் நேரடி களப் பயிற்சி போன்றவற்றிற்கு நாங்கள் சம அளவில் முக்கியத்துவம் அளித்து வருகிறோம். திறன் போட்டிகள் என்பன நமது நாட்டின் திறன் மேம்பாட்டு கட்டமைப்பின் ஒரு முக்கிய அங்கமாக உள்ளது; நமது தேசத்தைக் நிர்மாணிப்பதில் முக்கிய பங்கு வகிப்பதோடு, இந்திய இளைஞர்களின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்துறை சந்தையில் அவர்கள் ஏற்கப்படும் வாய்ப்பையும் இதுமேம்படுத்துகிறது. ‘தேசிய கல்விக் கொள்கை (என் ஈ பி) 2020’-இன் மூலம் திறன் மேம்பாட்டை கல்வியுடன் ஒருங்கிணைப்பதை நாங்கள் முறைப்படுத்தினோம்; 2023-24-ஆம் ஆண்டுக்கான உலக திறன்கள் போட்டியில், இந்தியாவின் பங்கேற்கும் பிரிவுகளை எம் எஸ் டி ஈ விரிவுபடுத்தும் என்றும், இந்தியா முதல் 10 இடங்களுக்குள் நுழையும் என்றும் நான் நம்புகிறேன். 2047-ம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்ற வேண்டுமென்கிற நமது தொலைநோக்குப் பார்வையை நனவாக்க - தொழில்துறை, கல்வியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் ஒன்றிணைந்து செயல்பட்டு, இந்த திறன் மேம்பாட்டை ஒரு மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்,” என்று கோரினார்.

இந்த நிகழ்ச்சியின் போது, உத்வேகம் தரும் தங்களது வாழ்க்கைத் தருணங்களைப் பகிர்ந்து கொண்ட வெற்றியாளர்கள் - கொடிய பெருந்தொற்று உட்பட அனைத்து இடர்களையும் எதிர்த்து அவர்கள் எப்படிப் போராடினார்கள், வெளிநாடுகளுக்குச் சென்று அவரவர்களின் குறிப்பிட்ட திறன் பிரிவில் உலகின் சிறந்த போட்டியாளர்களுடன் போட்டியிட்டதையும்; அதில் அசைக்க முடியாத உறுதி மற்றும் முடிவில்லா ஆர்வத்தை வெளிப்படுத்தியதை பற்றியும் சுவாரஸ்யமான விஷயங்களையும் பகிர்ந்துகொண்டனர். அவர்களின் ஆற்றலும், உற்சாகமும் நமக்கு ஒரு உத்வேகத்தை அளிப்பதாக மட்டுமில்லாமல் - மாநில அளவிலும், தேசிய அளவிலும் போட்டியிட மற்றவர்களையும் ஊக்குவிக்கும் ஒரு உந்து சக்தியாகவும் இருந்தது.

கொரோனா தொற்றுநோய் காரணமாக 2020-ஆம் ஆண்டிலிருந்து ஒத்திவைக்கப்பட்ட 46-வது உலக திறன்கள் (வேர்ல்டு ஸ்கில்ஸ்) போட்டியானது ஆரம்பத்தில் 2021-ஆம் ஆண்டில் நடத்தப்படுவதாகவே திட்டமிடப்பட்டிருந்தது. 84 நாட்களுக்கு 29 தனித்தனி நிகழ்வுகளாக நடத்தப்பட்ட போட்டியின் இந்த சிறப்பு பதிப்பானது 4,00,000-க்கும் மேற்பட்ட பார்வையாளர்களை வரவேற்றது. 56 உறுப்பு நாடுகள், மற்றும் பிராந்தியங்களைச் சேர்ந்த சுமார் 1,000 போட்டியாளர்கள் 62 திறன் போட்டிகளில் பங்கேற்றனர். இந்தியா சார்பாக 56 போட்டியாளர்கள் மற்றும் 50 நிபுணர்கள் - 50 திறன் பிரிவுகளில் பங்கேற்றனர்; மேலும், வழக்கமாக ஆண்களே அதிகமாக பங்கேற்கும் வெல்டிங், பிளம்பிங் மற்றும் ஹீட்டிங், சி என் சி மில்லிங், சி என் சி டர்னிங், எலக்ட்ரானிக்ஸ் மற்றும் பிரிக் லேயிங் போன்ற திறன்களை வெளிப்படுத்தும் போட்டிகளில் 19% பெண்கள் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. ‘நாட்டின் வளர்ச்சிக்கு மகளிரின் சக்தியைப் பயன்படுத்த வேண்டும்’ என்ற மாண்புமிகு. பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்கு சிந்தனையுடன் இது ஒத்துப்போவதாக இருந்தது.

இண்டஸ்ட்ரி 4.0, ரோபோ சிஸ்டம் ஒருங்கிணைப்பு, அடிட்டிவ் உற்பத்தி நுட்பம், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாடு, மொபைல் செயலிகளை உருவாக்குவது, டிஜிட்டல் கன்ஸ்ட்ரக்ஷன் ஆகிய பிரிவுகளின் கீழ் பட்டியலிடப்பட்ட ஆறு புதிய எதிர்கால திறன்களுக்கான போட்டிகளிலும் இந்திய அணி பங்கேற்றது.

இதில் முக்கியமாக கவனத்தில் கொள்ளும் விதமாக, 2011-ஆம் ஆண்டுக்கான உலக திறன்கள் போட்டியில் 39-வது இடத்திலிருந்த இந்தியா, 2022 ஆம் ஆண்டில் 11-வது இடத்திற்கு முன்னேறியுள்ளது; இது - இளைஞர்கள் தங்கள் பணிசார் வாழ்க்கையின் எல்லைகளை விரிவுபடுத்துவதையும், தற்போதைய பணியிட சந்தையில் அவர்களுக்கான வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கும், பல்வேறு திறன்களுடன் தொழிலாளர்களை தயார்படுத்துவதற்காக பல விதமான தொழில் பயிற்சியின் தேவை வளர்ந்து வருவதையும் பிரதிபலிக்கிறது. வெல்டிங், பிளம்பிங் & ஹீட்டிங், சி என் சி மில்லிங், சி என் சி டர்னிங், எலக்ட்ரானிக்ஸ், பிரிக் லேயிங், புதுப்பிக்கத்தக்க ஆற்றல், இண்டஸ்ட்ரி 4.0, மெக்கட்ரானிக்ஸ் மற்றும் ரோபோ சிஸ்டம் ஒருங்கிணைப்பு போன்ற வழக்கமாக ஆண்களால் மேற்கொள்ளப்படும் திறன் பிரிவுகளுக்கான போட்டிகளில் - பாலின பாகுபாட்டின் தடையைத் தகர்த்து கணிசமான எண்ணிக்கையில் பெண்கள் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

மேலும், 2023-24-ஆம் ஆண்டிற்கான இந்திய திறன்கள் போட்டி தொடங்கப்படுவதன் மூலம் - அந்தந்த திறன் பிரிவுகளில் உலகளாவிய தரத்தை ஊக்குவிப்பது, சரியான போட்டித் திறனை வெளிப்படுத்துவது, புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பது என இளம் இந்தியர்களின் விருப்பம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆட்டோமொபைல், எலக்ட்ரானிக்ஸ், பசுமைப் பணிகள், மற்றும் உற்பத்தி உள்ளிட்ட 15-க்கும் மேற்பட்ட துறைகளில் இந்த போட்டி நடைபெறவுள்ளது; ஆட்டோபாடி பழுது நீக்கம், சி என் சி மில்லிங், அடிட்டிவ் உற்பத்தி, ரோபோ சிஸ்டம் ஒருங்கிணைப்பு, நீர் தொழில்நுட்பம் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் என்பன போன்ற வர்த்தகங்களிலும் போட்டியாளர்கள் மோதவுள்ளனர்.

வளர்ந்து வரும் தொழில்துறை வல்லுநர்களின் பணிசார் வாழ்க்கையை முன்னேற்றுவதில், வேர்ல்டு ஸ்கில்ஸ் அல்லது இந்தியாஸ்கில்ஸ் போன்ற திறன் சாம்பியன்ஷிப் போட்டிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. திறன் பற்றாக்குறையால் ஏற்படும் இடைவெளியை நிரப்புவதற்கும், தொடர்ந்து வளர்ந்து வரும் வேலைவாய்ப்பு சந்தைக்கு நமது இளைஞர்களை தயார்படுத்துவதற்கும் உதவும் இது போன்ற போட்டிகள் - அரசாங்கங்கள், தொழில்துறை மற்றும் கல்வியாளர்களிடையே எளிதாக ஒரு ஒத்துழைப்பையும் ஏற்படுத்துகின்றன. இந்திய இளைஞர்கள் உலகத் தரத்தில் திறன்களைப் பெறவும், அதில் நிபுணத்துவம் பெறவும், உற்பத்தித்திறனை அதிகரிக்கவும் இத்தகைய முன்முயற்சிகள் பெரிதளவில் உதவக்கூடும்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

வெள்ளிக்கிழமை,
அக்டோபர் 20, 2023

‘கிராண்ட் இந்தியன் ஃபெஸ்டிவல் ஆஃப் டிரஸ்டின்‘ 2 வது பதிப்புடன் பண்டிகைக் காலத்தை ஒளிரச் செய்யும் ஹீரோ மோட்டோகார்ப்

சென்னை, 20 அக்டோபர் 2023: பண்டிகைக் கால உற்சாகத்தை மேலும் அதிகரிக்கும் வகையில், உலகின் மிகப்பெரிய மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்கள் உற்பத்தியாளரான ஹீரோ மோட்டோகார்ப், ஹீரோ கிப்ட் (கிராண்ட் இந்தியன் ஃபெஸ்டிவல் ஆஃப் டிரஸ்ட்) இன் இரண்டாவது பதிப்பை அறிவித்துள்ளது. கிப்ட் திட்டமானது புதிய மாடல் புதுப்பிப்புகள், கண்ணைக் கவரும் வண்ணத் திட்டங்கள், அற்புதமான பலன்கள்*, நிதித் திட்டங்கள்* மற்றும் பலவற்றை உள்ளடக்கியுள்ளது.

2022 ஆம் ஆண்டு முதன்முதலில் தொடங்கப்பட்ட, ஹீரோ கிப்ட் திட்டம், நீரான நவீன மரபுகளுடன் கட்டுப்பாடற்ற கொண்டாட்டங்களை உள்ளடக்கியது. இந்த ஆண்டு மெகா பிரச்சாரத்தின் தீம் ‘ஈஸ் தியோஹார், நயி ரப்தார்’ பண்டிகையை உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும் கொண்டாடத் தயாராகி வரும் இந்தியக் குடும்பங்களின் நேர்மறையான உணர்வுகளைப் பிரதிபலிக்கிறது.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த ஹீரோ மோட்டோகார்ப் இந்திய வணிகப் பிரிவின், தலைமை வணிக அதிகாரி, திரு. ரஞ்சிவ்ஜித் சிங் அவர்கள், “வாடிக்கையாளர்கள் எங்கள் மீது வைத்திருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையை நினைவுகூரும் வகையில், ஹீரோ கிப்ட் திட்டம் நன்றியுணர்வைக் காட்டுகிறது. நாட்டில் மிகவும் விரும்பப்படும் பிராண்டாக, எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்ததைக் கொண்டு வருவதில் ஹீரோ மோட்டோகார்ப் பெருமை கொள்கிறது. கிப்ட் திட்டத்தின் மூலம், கவர்ச்சிகரமான நிதித் திட்டங்கள் மற்றும் குறைந்த வட்டி விகிதங்களுடன் கூடிய அற்புதமான மோட்டார்சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்களை வழங்குவதை நாங்கள் இலக்காகக் கொண்டுள்ளோம், இது வாடிக்கையாளர்கள் பிரபலமான ஹீரோ தயாரிப்புகளை வீட்டுக்குக் கொண்டு வர உதவும்” என்று கூறினார்.

5500 ரூபாய் வரையிலான ரொக்கப் போனஸ்* மற்றும் 3000 ரூபாய்* வரையிலான எக்ஸ்சேஞ்ச் போனஸ் மற்றும் இப்போது வாங்குங்கள் 2024 இல் பணம் செலுத்துங்கள் போன்ற அற்புதமான நிதித் திட்டம் போன்ற பல புதிய நன்மைகளையும் வழங்குகிறது. வாடிக்கையாளர்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன்களைப் பெறுவதற்கான வாய்ப்பும் உள்ளது. 6.99%, ஹைபோதெகேஷன் கட்டணங்களிலிருந்து இலவசம், மேலும் ஆதார் அடிப்படையிலான கடன்கள் மற்றும் வசதியான பண ஈஎம்ஐ களில் இருந்து பயன்கள் கிடைக்கும்.

ஹீரோ மோட்டோகார்ப், கிப்ட் 2023 திட்டத்தை விளம்பரப்படுத்த, தொலைகாட்சி, அச்சு, டிஜிட்டல் மற்றும் ஓஓஎச் ஆகியவற்றில் இந்தியா முழுவதும் 360 டிகிரி பிரச்சாரத்தையும் திட்டமிட்டுள்ளது. கிரிக்கெட் சீசனின் கொண்டாட்ட மனநிலையைச் சேர்க்கும் வகையில், தற்போது நடைபெற்று வரும் ஐசிசி ஆண்கள் கிரிக்கெட் உலகக் கோப்பை 2023 இன் தொலைக்காட்சி ஒளிபரப்பிலும் இந்த விளம்பரப் பிரச்சாரம் இடம்பெறும்.

ஓரியண்ட் எலக்ட்ரிக் தீபாவளியை முன்னிட்டு ஜாய்லைட் பண்டிகை விளக்குகளை அறிமுகப்படுத்துகிறது

சென்னை, 18 அக்டோபர் 2023: கார்த்தி நடிப்பில் 25 ஆவது படமாக தயாராகி இருக்கும் 'ஜப்பான்' திரைப்படத்தை கொண்டாடும் வகையில் அவருடைய ரசிகர்கள் தொடர்ந்து 25 நாட்களுக்கு, தினசரி ஆயிரம் பேர் வீதம், 25 ஆயிரம் மக்களுக்கு அன்னதானத்தை வழங்குகிறார்கள். கார்த்தி மக்கள் நல மன்றம் சார்பில் தொடங்கப்பட்டிருக்கும் இந்த தினசரி அன்னதானத் திட்டத்தை 'ஜப்பான்' படத்தின் தயாரிப்பாளரான எஸ் ஆர் பிரபுவும், அப்படத்தின் இயக்குநரான ராஜு முருகனும் இணைந்து தொடங்கி வைத்தனர். இதன்போது கார்த்தி மக்கள் நல மன்றத்தின் அகில இந்திய செயலாளர் உள்ளிட்ட மாநில நிர்வாகிகளும், மாவட்ட தலைவர்களும் உடனிருந்தனர். நடிகர் கார்த்தி நடிப்பில் தயாராகி வரும் 25 வது திரைப்படம் 'ஜப்பான்'. இதனை முன்னிட்டு 25 ஆயிரம் மக்களுக்கு உணவு வழங்க வேண்டும் என நடிகர் கார்த்தி விருப்பம் தெரிவித்தார். அவருடைய விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் கார்த்தி மக்கள் நல மன்றம் மற்றும் உழவன் அறக்கட்டளை சார்பில் ஒரே நாளில் 25 ஆயிரம் பேருக்கு உணவு வழங்குவதை விட, தொடர்ந்து 25 நாட்களுக்கு நாள்தோறும் ஆயிரம் பேருக்கு உணவு வழங்க திட்டமிட்டனர்.

அக்டோபர் 17ஆம் தேதி தொடங்கி, 'ஜப்பான்' திரைப்படம் வெளியாகும் நவம்பர் 10ஆம் தேதி வரை இந்த உணவு வழங்குவது தொடரும் என்று கார்த்தி ரசிகர் மன்றத்தினர் தெரிவித்திருக்கிறார்கள். இதன் போது சென்னையில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கு நாள்தோறும் ஆயிரம் மக்களுக்கான சுவையான உணவினை பரிமாறவிருக்கிறார்கள்.

பசித்த வயிறுக்கு உணவிட வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் தொடங்கப்பட்டிருக்கும் இந்த திட்டத்தை கண்டு.. யாரேனும் ஒருவர் பசித்த ஒருவருக்கு உணவு வழங்கினாலும் கார்த்தியின் நோக்கம் வெற்றி பெறும் என கார்த்தி மக்கள் நல மன்ற நிர்வாகிகள் தெரிவித்தனர்.

அக்டோபர் 17ஆம் தேதி சென்னையில் உள்ள தி. நகர் பகுதியில் கார்த்தி மக்கள் நல மன்றத்தின் அகில இந்திய செயலாளர் வீரமணி, மாநில நிர்வாகிகள், சென்னை மண்டல ஒருங்கிணைப்பாளர் மாவட்ட தலைவர்கள் ஆகியோர் உடனிருக்க.. 'ஜப்பான்' படத்தின் தயாரிப்பாளர் எஸ். ஆர். பிரபு மற்றும் இயக்குநர் ராஜு முருகன் ஆகியோர் ஆயிரம் பேருக்கு சுவையான உணவு வழங்கும் திட்டத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தனர். தமிழ் திரையுலகின் முன்னணி நட்சத்திர நடிகரான கார்த்தி நடிக்கும் 25 வது படமான 'ஜப்பான்' படத்தின் வெற்றிக்காக.. 25 நாட்கள் 25 ஆயிரம் பேருக்கு உணவு வழங்கும் உன்னத திட்டத்தை முன்னெடுத்ததற்காக திரையுலகினரும், ரசிகர்களும் கார்த்தி மற்றும் அவருடைய மக்கள் நல மன்றத்தினருக்கு வாழ்த்துகளை தெரிவித்திருக்கிறார்கள்.

ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் தனது புதிய பிராண்ட் அடையாளம் மற்றும் விமானங்களின் தோற்றத்திற்கான வண்ண வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துவதோடு விமான அணிவகுப்பில் புதிய விமானங்களை இணைத்து தனது செயல்பாட்டுகளை விரிவுப்படுத்துகிறது

சென்னை, 20 அக்டோபர் 2023: டாடாவுக்கு முழு உரிமம் உடைய ஏர் இந்தியாவின் துணை நிறுவனங்களான ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் மற்றும் ஏர்ஏசியா இந்தியா ஆகிய இரு விமான சேவை நிறுவனங்களும், புதிய போயிங் பி737ரூ8 விமானத்தில் ‘ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ்’ என்னும் பொதுவான, மறுவரையறையுடன் புதுப்பிக்கப்பட்ட ப்ராண்டிங் குறித்த அறிவிப்பை வெளியிட்டு இருக்கின்றன.

நவீன தோற்றம் மற்றும் கண்களைக் கவரும் வகையில் கம்பீரமான வடிவமைப்பு, பிரகாசமான வண்ணங்கள் மற்றும் விமான தோற்ற குறியீடுகளுடன் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் தனது விருந்தினர்களை "நீங்கள் நீங்களாகவே பறக்க" அழைத்துள்ளது. மேலும் நாம் செல்லவிருக்கும் இடங்கள், மக்கள் மற்றும் கலாச்சாரங்களில் அர்த்தமுள்ள இணைப்புகளை உருவாக்குவதன் மூலம் தங்களது தனித்துவத்தை வேறுபடுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் புதிய மாற்றங்களை அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவுக்கே உரிய தனித்துவமான விருந்தோம்பல் அரவணைப்புடன், விமானச் சேவையில் மிகச்சிறந்த சேவைகளுடன் எந்தவிதமான அசௌகரியங்களும் இல்லாத மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம் செயல்படுத்தப்படும் பயண அனுபவங்களை மேம்படுத்துவதை ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் தனது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த மாபெரும் அறிமுக நிகழ்வில் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸின் தலைவர் திரு. கேம்ப்பெல் வில்சன் மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸின் நிர்வாக இயக்குநர் அலோக் சிங் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸின் விமான சேவை பட்டியலில் ஏற்கனவே இருக்கும் 58 விமானங்களுடன் புதிதாக சேர்க்கப்பட்டிருக்கும் முதல் போயிங் 737-8 விமானத்தில், அட்டகாசமாக புதுப்பிக்கப்பட்டு இருக்கும் ப்ராண்டின் அடையாளங்கள், முத்திரைச்சின்னம் மற்றும் விமான தோற்ற வண்ண குறியீடுகளையும் அறிமுகம் செய்து வைத்தனர்.

ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனத்தின் தலைவர் கேம்ப்பெல் வில்சன் கூறுகையில், "ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் மற்றும் ஏர்ஏசியா இந்தியா ஆகிய இரு நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு தற்போது இறுதி கட்டத்தில் உள்ளது. இதன் தொடர்ச்சியாக விமானப் போக்குவரத்து துறையில் பெரும் மாற்றத்தையும் எங்களால் காண முடிகிறது. ஏர் இந்தியா குழுமத்தின் முக்கிய அங்கமான ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ்சின், புதிய பிராண்டை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறோம். ஒவ்வொரு இந்தியருக்கும் சிறந்த மதிப்பு, எளிதில் விமான சேவைகளைப் பெறும் வாய்ப்பு மற்றும் உள்நாட்டு மற்றும் பிராந்திய இணைப்புகளை வழங்குவதுடன், புதிய தலைமுறையின் விமான சேவை நிறுவனமாக மாற வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். இந்தியாவையும் இந்தியர்களையும் ஒருவருக்கொருவர் இணைப்பதோடு, உலகத்துடன் இணைப்பதே எங்களது இந்த முயற்சிகளின் பெரும் லட்சியமாகும்.'' என்றார்.

ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ்சின் புதிய அடையாள தோற்றமானது, எக்ஸ்பிரஸ் ஆரஞ்ச் மற்றும் எக்ஸ்பிரஸ் டர்க்குவாய்ஸ் ஆகிய வண்ணங்களை முதன்மை வண்ணங்களாகவும், எக்ஸ்பிரஸ் டேங்கரின் மற்றும் எக்ஸ்பிரஸ் ஐஸ் ப்ளூ ஆகியவற்றை துணை வண்ணங்களாகவும் கொண்ட உற்சாகமான, ப்ரீமியம் தோற்றத்தை அளிக்கின்றன. அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கும் எக்ஸ்பிரஸ் ஆரஞ்ச் வண்ணமானது ஏர் இந்தியா எக்ஸ்பிரஸின் பிராண்ட் மதிப்புகளான உற்சாகம் மற்றும் உத்வேகம் ஆகிய இரண்டு குணாதிசயங்களைக் குறிக்கிறது. மேலும் இவை இந்தியாவின் ஆத்மார்த்தமான அன்பையும், அரவணைப்பையும் பிரதிபலிப்பதாகவும் அமைந்திருக்கின்றன. எக்ஸ்பிரஸ் டர்க்குவாய்ஸ், தற்கால ப்ரீமியம் தர உணர்வை மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை முதன் முதலில் செயல்படுத்தும் அம்சத்தையும் குறிப்பதாக அமைந்திருக்கிறது.

புதிய பிராண்ட் அடையாளம் குறித்து பேசிய ஏர் இந்தியா எக்ஸ்பிரஸின் நிர்வாக இயக்குநர் அலோக் சிங், "ஒருங்கிணைக்கப்பட்ட ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ்-ஏர்ஏசியா இந்தியா நிறுவனம், நவீனமயமான, புத்துணர்ச்சியூட்டும் பிராண்டிங் அம்சத்துடன், 'நவீன இந்தியாவின் ஸ்மார்ட் கனெக்டர்' ஆக முன்னிறுத்தும் வகையில், ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் ஆக செயல்படும். நவீன தொழில்நுட்ப எரிபொருள் திறன் கொண்ட போயிங் பி737 - 8 விமானங்களை எங்களது விமான சேவைகளில் பயன்படுத்துவது, எங்களது ப்ராண்டிங்கின் மறுவரையறை செய்யும் முயற்சிகளில் ஒரு புதிய செயல்பாட்டை குறிப்பதோடு, எங்களது லட்சியத்தியை நோக்கிய வளர்ச்சி மற்றும் அடுத்தக்கட்ட பயணத்தை குறிப்பதாகவும் அமைந்திருக்கிறது. அடுத்த 15 மாதங்களில் 50 விமானங்கள் எங்களது விமான சேவை அணிவகுப்பில் சேர்க்கப்பட உள்ளதால், மிக குறுகிய காலத்திலேயே எங்களது விமான அணிவகுப்பை இரு மடங்காக அதிகரிக்க இருக்கிறோம். மேலும், இந்திய உள்நாட்டு சந்தை மற்றும் குறுகிய தூர சர்வதேச சந்தைகளை உள்ளடக்கிய தொடர் செயல்பாடுகளுடன், 170 குறுகிய உடல் கட்டமைப்புடனான விமானங்களின் அணிவகுப்புடைய நிறுவனமாக வளர்ச்சியடைய நாங்கள் இலக்கு வைத்துள்ளோம். எங்களது தனித்துவமிக்க பாரம்பரியத்துடன், நிறுவனத்தின் அடையாள தோற்றம் நாட்டின் வளமான கலை மற்றும் கைவினைப் பாரம்பரியத்தால் ஈர்க்கப்பட்ட டெயில்ஃபின் வடிவமைப்பைக் கொண்டிருப்பதாக அமைந்திருக்கிறது. இது 'இந்தியாவின் வடிவங்கள்' என்ற கருப்பொருளில் உருவாக்கப்பட்டு இருக்கிறது.'' என்றார்.

இந்த ப்ராண்டின் புதிய தோற்ற அடையாளத்தை அறிமுகப்படுத்தும் அதேநேரத்தில், ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் தனது புதிய முதன்மை ஒலி அடையாளத்தையும் வெளியிட்டு இருக்கிறது. இந்த சிக்னேச்சர் சோனிக் ஐடென்டிடி ஒரு துடிப்பான மெல்லிசையாகவும், எதிர்பார்புகள், நம்பிக்கை மற்றும் நம்பிக்கை நிறைந்த முற்போக்கான புதிய இந்தியாவின் ஆத்மார்த்தமான குணாதிசயத்தை உள்ளடக்கியதாகவும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஏர் இந்தியா எக்ஸ்பிரஸின் தனித்துவமான இசை முத்திரையானது கருணா, அத்புதா மற்றும் வீராவின் ரசங்களை உணர செய்வதாகவும் அமைந்துள்ளது. இது புதிய இந்தியாவின் ஒலிகளுக்கு இசையோடு இணைந்த வரவேற்பு ஆக இருக்கிறது.

அறிமுக விழாவின் போது முதல் புதிய போயிங் 737-8 விமானத்தின் அடையாள வண்ண குறியீட்டுத் தோற்றம் காட்சிப்படுத்தப்பட்டது. இது பந்தனி ஜவுளி வடிவமைப்பிலிருந்து உத்வேகம் பெறப்பட்டு வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இதையடுத்து வரவிருக்கும் புதிய விமானங்கள், இந்தியாவின் கலை பன்முகத்தன்மையை வெளிப்படுத்தும் அஜ்ரக், படோலா, காஞ்சீவரம், கலம்கரி போன்ற பிற பாரம்பரிய வடிவங்களால் ஈர்க்கப்பட்ட வடிவமைப்புகளைக் உள்ளடக்கியதாக இருக்கும். ஏர் இந்தியா எக்ஸ்பிரஸின் ‘இந்தியாவின் வடிவங்கள்’ என்னும் கருப்பொருள், நம்முடைய தேசத்தின் ஆத்மார்த்தமான உணர்வை உள்ளடக்கியிருப்பதோடு அதன் கதைகளை அழகிய காட்சிப் பயணத்தின் மூலம் பகிர்ந்து கொள்வதாக அமைந்திருக்கிறது. இது விமானப் போக்குவரத்து துறையில் இந்த ப்ராண்டின் தனித்துவமிக்க இடத்தையும், தொழில்நுட்பம், எளிதில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள், புத்திசாலித்தனமான வடிவமைப்பு மற்றும் இந்திய விருந்தோம்பலின் நிறைவான உணர்வையும் ஒருங்கிணைத்து அருமையான பயண அனுபவங்களை தனது விருந்தினர்களுக்கு வழங்குவதற்கு கொண்டிருக்கும் உறுதிப்பாட்டையும் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.